THE HON. SRI R. VENKATARAMAN : கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் முத்துக்கண்ணப்பன் அவர்களுக்கு இரண்டு வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, யார் வேண்டுமானாலும் யாருடைய கணக்கை வேண்டுமானாலும் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டால், கொஞ்சம் கௌரவத்தைப் பார்க்கிறவர்கள் எல்லாம் கூட்டுறவு சொசைடியை விட்டு ஓடிப் போய் விடுவார்கள். இரண்டாவது திருத்தத்திலே மெம்பர் அல்லாத வெளியார்கூட அதைப் போய்ப் பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். அப்படி வெளியார் பார்த்து அவர்கள் அதை வெளியே போய் சொல்லிவிட்டால், தவறான பிரசாரம் செய்தால், அதற்கு எவ்விதமான பரிகாரமும் இல்லாமல் போய்விடும். மெம்பராக இருந்தாலும் அவர் அப்படித் தவறாக நடந்தால் அவரை சொசைடியை விட்டு வெளியேற்ற முடியும். மீட்டிங் போட்டு இந்தக் கணக்கை வந்து பார்த்தபின் அதைத் தவறான முறையில் வெளியே சென்று பிரசாரம் செய்தால், அவர்களை நீக்கவேண்டுமென்று முடிவு செய்யலாம். வெளியார்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டால், அவர்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதனால் அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுப்பது சரியல்ல. கணக்கைப் பொறுத்தவரை, வேறு பரிகாரமே இல்லையா என்று பார்த்தால், இருக்கிறது. 66-வது பிரிவின்படி நிறையப் பரிகாரம் இருக்கிறது. தவறு ஏற்படுகிறது என்று மெம்பர் நினைத்தால், அதைக் கேட்பதற்கு திரு. அருணாசலம் அவர்கள் கூறியதுபோல, மகாசபைக் கூட்டம் இருக்கிறது. மகாசபையிலே கேட்கலாம். மகாசபையில் சரியான பதில் கிடைக்கவில்லையென்றால், அதை வைத்து ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு 'அப்ளிகேஷன்' போட்டால் அவர் இன்வெஸ்டிகேஷன் செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்வார். அதனால் நேரில் போய்ப் பார்ப்பதற்கே அவசியமில்லை. யார் வேண்டுமானாலும் அதைச் செய்யக்கூடாது. யாராவது பொறுப்புள்ள அதிகாரி 'prima facie case' இருந்தால், அந்தக் கணக்கைப் பார்த்துப் பரிசீலனை செய்ய அதிகாரம் இருக்கிறது. தங்களுடைய கணக்கைத் தாங்கள் பார்க்கலாம். பிறருடைய கணக்கைப் பார்க்கவேண்டுமென்றால், அதிகாரிகள் மூலம் பார்க்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். கட்டணம் எதற்காக என்று கேட்டார்கள். கட்டணம் இல்லையென்று சொன்னால், தினம் 100 அங்கத்தினர்கள் அங்கே போய் உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். கட்டணம் இருந்தால், ஒருமுறைக்கு இரண்டு முறை யோசித்து

1st September 1961] [Sri R. Venkataraman]

விட்டு கணக்கைப் பார்க்கலாமா வேண்டாமா என்று முடிவு செய்து போய்ப் பார்ப்பார்கள். கட்டணம் இல்லையென்றால், கூட்டுறவு சொசைடியில் வேறு வேலை செய்ய முடியாது. கணக்கு மட்டும் காட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதான். ஆகையால், இந்த நிலைமையில் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. K. THANGAVEL MUDALIAR : 'மினிட்ஸ் புக்'-ஐயாவது எல்லோரும் பார்க்கலாமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மினிட்ஸ் புக் எல்லாம் சாதாரண டாக்குமெண்டுகள். இப்போது கணக்குகளைப்பற்றித் தான் பேசுகிறோம்.

VIDWAN T. MUTHUKANNAPPAN : I do not press my amendment, Sir.

The amendment was, by leave withdrawn.

Clause 22 was put and carried.

Clauses 23 to 25 were put and carried.

Clause 26.

MR. CHAIRMAN : The motion is—

" That clause 26 do stand part of the Bill."

SRI T. P. SRINIVASAVARADAN : Mr. Chairman, Sir, I move—

" In sub-clause (3) (*a*), after the words ' the date of ' and before the words ' a requisition ', *insert* the words ' the receipt of '."

" In sub-clause (3) (*b*), after the words ' specify the subjects ' and before the words ' that shall be ' *insert* the words ' which are definite matters of urgent importance '."

In regard to the first amendment, the clause states that the Committee may, at any time, call a special general meeting of the registered society and shall call such a meeting within one month of the date of a requisition in that behalf from—I have suggested the inclusion of the words ' the receipt of ' after the words ' the date of ' and before the words ' a requisition '. This is only a verbal amendment. If the requisition is made, say on the 3rd, and it is received only on the 10th, the meeting shall be called within one month from the 10th.

The second seeks to insert the words ' which are definite matters of urgent importance '. The clause, as it is, is vague and, therefore, I want to make it read : ' . . . . and specify the subjects which are definite matters of urgent importance that shall be placed for consideration at the special meeting '.

The amendment was duly seconded.

[1st September 1961.

4-00 p.m.

Sri M. ETHIRAJALU : இந்த இரண்டாவது திருத்தத்திலே "which are definite matters of urgent importance" என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், இந்த "definite matters of urgent importance" என்பதை யார் தீர்மானிப் பது என்ற பிரச்னைக்குத்தான் இடம் ஏற்படும். இந்தத் தீர் மானத்திற்கு முடிவு கட்டுவதற்கு அந்தக் கமிட்டிக்குக்கூட அதிகாரம் இல்லையென்று வேறுவிதமாக நாம் மாற்றினல், கூட்டுறவு சங்கத்திற்கே நன்ருக இருக்காது என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், இதைப்பற்றியே பரிசீலித்துக்கொண்டிருக்க வேண்டிவரும். ஆகையால் "which are definite matters of urgent importance" என்ற வார்த்தைகளை இதில் புகுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, the Select Committee very carefully considered this particular clause and also the words 'within one month from the date of receipt of a requisition' and the words 'within one month of the date of a requisition'. We felt that the societies were generally going on postponing convening of the meeting. Therefore, a large volume of opinion is in favour of having the words 'within one month of the date of a requisition'. Therefore this clause has been put in. If, in practice, we find any difficulty later on, then it will be time to reconsider. Since the members of the Select Committee felt that we should not give time unnecessarily to the societies to postpone the convening of the meetings, we have adopted this phraseology after consieration.

So far as the second amendment is concerned, Sri M. Ethirajalu has clearly explained the implication. So, the Government are unable to accept the amendments.

Sri T. P. SRINIVASAVARADAN : On a point of clarification, Sir. Are the societies permitted to incorporate in their by-laws the phraseology 'within one month from the date of receipt of a requisition'? Will this go against the spirit of the Act?

The Hon. Sri R. VENKATARAMAN : The Minister cannot give advice.

Sri T. P. SRINIVASAVARADAN : I withdraw my amendment, Sir.

The amendment was, by leave, withdrawn.

Clause 26 was put and carried.

Clause 27 was put and carried.

Clause 28.

Mr. CHAIRMAN : The motion is—

'That clause 28 do stand part of the Bill'.

1st September 1961]

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, I move—

'In sub-clause (1), *after* item (*g*), *add* the following as new item (*h*) :

"(*h*) has held office as member of the committee or otherwise for two consecutive terms or for six years whichever is higher either before or after the commencement of the Act unless a period of two years has elapsed from the date of the expiry of the last term of office".'

SRI G. KRISHNAMOORTHY : I second it, Sir.

SRI M. SUBBIAH CHETTIAR : தலைவரவர்களே, இந்த 28-வது செக்ஷனில் முதலில் இதற்கு வழிவகை செய்திருந்தார்கள். இப்பொழுது நமக்குமுன் 'Assembly'-யில் பாஸ் செய்திருக்கும் Bill -ல் இது விட்டிருக்கிறது. எதற்குச் சொல்கிறேனென்றால், நேற்று முன் தினம் நடந்த சபையில், கூட்டுறவுச் சங்க நிர்வாகத்திலிருப்பவர்கள் இந்த சங்கம் இதுவரை ஒரு கூட்டத்திற்கே பயன்பட்டு வருவதாகவும், அதனால் புதிதாக வருபவர்களுக்கு இடமில்லையென்றும் சொன்னார்கள். அப்படி இருக்கும்பொழுது இந்த சங்கத்திற்கு எந்தக் கஷ்டமும் ஏற்படக்கூடாதென்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்தத் திருத்தத்திற்கு அவசியமில்லை. அரண்மனையிலும், ஆண்டி மடத்திலும்தான் பழம் பெருச்சாளிகள் இருப்பதாகக் கூறப்பார்த்திருக்கிறோம். இதற்கு சந்தர்ப்பமிருப்பதில்லை. இந்தமாதிரி வருபவர்கள் இரண்டு term அல்லது 6 வருஷத்திற்கு மேல் இருக்கக்கூடாதென்றுதான் இந்தச் சங்கம் முடிவு செய்திருக்கிறது. இதை அமைச்சர் ஒத்துக்கொண்டு, பழம்பெருச்சாளிக்கு இடமில்லாமல் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. J. ARUNACHALAM : தலைவர் அவர்களே, ஆரம்பத்தில், அரசாங்கம் இந்த மசோதாவை பொதுஜன அபிப்பிராயத்திற்கு விட்டார்கள். பொதுஜன அபிப்பிராயத்தையும், இந்த இயக்கத்திலிருக்கும் பல ஸ்தாபனங்களிலிருப்பவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்ட பிறகு, இந்த கண்டிஷன் இருக்கவேண்டியது அவசியமில்லையென அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஏற்கெனவே இந்த மசோதா வரும்போது பொதுப்படையாகப் பேசும் நேரத்தில் இந்த இயக்கத்திலுள்ளவர்களுமிருக்கிறார்கள்—சிறிய குறைகளிருக்கின்றனவென்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள் ஆனால் நீண்ட நாள் சேவை செய்பவர்களில் பலர், அந்த ஸ்தாபனத்தை வளர்த்தவர்கள், இருக்கிறார்கள். அதற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து பலர் ஸ்தாபனத்தை வளர்த்திருக்கிறார்கள். இது போன்ற ஒரு விதியின்படி அவர்கள் பதவியை இழக்க வேண்டி வருகிறது. இப்பொழுது பல புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருப்பது இந்த அங்கத்தினர்களுக்குத் தெரியும். மெம்பர்களாக யாரை வேண்டுமானாலும் சேர்க்கலாமென்ற விதி புகுத்தப்பட்டிருக்கிறது. Election -க்கு ரகசியமான முறையில் வோட்டு

எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிகப்படி தவருக ஒருவர் நடந்து ஆதிக்கம் ஒருவரே செலுத்துவதாகத் தெரிந்தால், மெம்பர்களெல்லாம் சேர்ந்து ரகசிய முறையில் நிர்வாகஸ்தர் தவறுகளை மனதில் வைத்து ஓட்டு போடும் காலத்தில் அவருக்குப் பாடம் புகட்ட சங்கத்திற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனுல் 6 வருஷமோ, 9 வருஷமோ என்ற விதி அவசியமில்லை. நான் இந்த இயக்கத்தில் 30 வருஷமாக இருக்கிறேன். இருபத்தி மூன்று வருஷமாக சென்னை மாநிலக் கைத்தறி நெசவு சங்கத்திற்கு (இந்திய யூனில் பெரிய ஸ்தாபனமாக 220,000 தறியை வைத்திருக்கிறது). வட ஆற்காடு ஜில்லா சார்பாக 7 முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். ஆறு முறை போட்டியில்லாமலும், ஒருமுறை போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் நானே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னர்கள். நான் தவறு இருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்று சொன்னர்கள். அப்படியானுல், நான் நிற்கவில்லையென்று நானே விலகினேன். நான் நின்ருல் வரமுடியாதென்று கருத்து இல்லை. புதிய ஷாத்துக்களில் ரகசிய Ballot முறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. Membe s யாரை வேண்டுமானுலும் சேர்த்துக்கொள்ளலாமென்று இருக்கிறது. இதனுல் தவறு செய்பவர்கள் மறுமுறை வேண்டுமென்ருல், இந்த இயக்கத்தை சுயநலத்திற்குப் பயன்படுத்த விரும்பினுல், அவர்களை மெம்பர்களே வீட்டுக்குப் போங்களென்று, மற்றவர்களுக்கு ஓட்டுக் கொடுத்து அவர்களை அமர்த்தலாம். அந்த மாதிரி provi-ion இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒருவரே நிற்கக்கூடாதென்று சொல்லுவது அவர் உரிமையை மறுப்பதாகும். அதற்கு அனுவசியமாக இடங்கொடுக்கக் கூடாதென்பதுதான் மக்களபிப்பிராயம். அதற்குப் பிறகு, ஒருவரே பல ஸ்தாபனங்களில் தொடர்ந்து இருந்து வருவதைத் தடுக்க, ஒருவர் ஐந்து சங்கங்களில்தான் பதவி வகிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஐந்தில் இருந்தால் மாநில லெவலிலும், ஜில்லா லெவலிலும் இத்தனை ஸ்தாபனங்களில்தான் இருக்கலாம் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் இப்பொழுது நேர்மையானவர்கள்தான் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட நல்ல கருத்துக்கள் இதிலிருப்பதால், கனம் சுப்பையா செட்டி கொடுத்த தீர்மானம் அவசியமில்லையென எதிர்க்கிறேன்.

4-10 p.m.

SRI M. SESHACHARIAR: Mr. Chairman, I oppose this amendment, and I wish to say only this. There is the talk of old bandicoots being here. But there is no talk of old bandicoots being in the local boards or municipalities. There are old bandicoots, of course in all walks of life. There are good people and there are bad people also. Good people do public service. They are in the positions they occupy because the people like them. We cannot say that people who are there for a longer time are always bad. It is not proper to conclude that way. A person is in

1st September 1961] [Sri M. Seshachariar]

a certain office for a long time because he has been utilizing all his powers for the good of the people and he is there by reason of the fact that he is elected to that office. It cannot be said that he is a bad man. There is the general feeling in the country that certain persons are there for a very long time and that fresh blood has not come in. The people think that younger persons must come in. For this purpose they thought that a provision could be made so that the people who had been there for six or nine years might be shut out for all time. But there are other restrictions now. There is the provision for secret ballot. There is also the circumstance that one-third of the members must retire every year. That is the uniform rule for all the societies. The period is fixed as three years. One-third of the directors have to retire once a year. It is not difficult for the people to understand at that stage whether a person is harmful or not. In a municipal council, we cannot know everything about the condition of the municipality. The budget of the municipality is not placed before all the people. But so far as the society is concerned, the budget and the audit report on the accounts are placed before the general body. People know very well how the society has been working and the nature of the persons who are managing the affairs. It is possible for the people to remove the bad persons and bring in others. This is a possibility. No doubt, people are not very much educated. It is necessary for us to educate them. That is why in the Act there is provision made for the creation of an education fund. If people are educated properly, surely the proper men alone will come. It is for us to educate the people. There are societies where the people have come to understand their rights. Everywhere we find changes. We see a number of writ petitions being filed in the High Court. It is a healthy sign that people have understood their rights. They are not prepared to allow persons to remain in the same position for all time. To say that old bandicoots are there, is not correct. We cannot have such a legislation in the municipalities and in the panchayats. Therefore, it is not proper to say that those people who are there always are to be shut out. There are other safeguards. We have restricted the membership to five societies. There are people who have been in a number of central banks and central societies and also in apex societies. Now it is all restricted. One cannot be a member in more than five societies at a time. One cannot remain there for a longer time. It will be decided by lot as to who should retire at the end of the year. There is the secret ballot also. Therefore, I say that all these provisions are enough for the purpose of bringing in younger men who would really like to come into the co-operative fold.

SRI K. BALASUBRAMANYA AYYAR : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப்பற்றி ரொம்ப விவாதம் செய்தோம். முதலில் ஒருவிதமாகப் போட்டிருந்தது. அந்தப் பிரச்னையில் திரு. அருணாசலம் அவர்கள் வெகு உற்சாகமாக இருந்தார். நான் உண்மையைச் சொல்கிறேன். நானும் கூட இருந்தேன்.

[Sri K. Balasubramanya Ayyar] [1st September 1961

அதையும் சொல்கிறேன். அதற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கும்போது அதில் சில நல்லதும் சில கெடுதலும் இருக்கின்றன என்று தெரிந்தது. மறுபடியும் ஆலோசனை செய்வதற்காக மெம்பர்களையெல்லாம் காலை பத்து மணிக்கே வந்துவிடவேண்டும் என்றார் மந்திரி. வந்தோம். யோசனை செய்தோம். அப்போது அனேகமாக யோசித்துப் பண்ணியதுதான். பெருச்சாளி என்று சொன்னார்கள். அதை யாரும் ஒழிக்க முடியாது. என் வீட்டில் ரொம்ப நாளாக ஒரு பெருச்சாளி இருக்கிறது. அதை என்னால் அடிக்கவே முடியவில்லை. அதிலும் பழம் பெருச்சாளியாக இருந்தால் கேட்கவே வேண்டாம். பழம் பெருச்சாளியை ஒருவரும் அடித்தது கிடையாது. அதெற்கெல்லாம் நாம் சிரமப்பட்டால், இன்னும் இரண்டு வருஷம் போட்டாலும்கூட, அது பெரிய பெருச்சாளியாக வளர்ந்துவிடுமே தவிர போகாது. அதை மாற்ற முடியாது. நம்முடைய சுபாவத்திற்கு விரோதமாக உள்ள விஷயம் இது. எல்லோரும் வந்து சேரலாம், எவ்வளவு பேரும் வந்து சேரலாம் என்று இருக்கிறது. அதனால் கூட்டுறவு சங்கமெல்லாம் பெரிதாகப் போகிறது. அதனால் இனிமேல் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் இனிமேல் அப்படி ஒன்றும் இருக்காது என்றுதான் நாம் நினைக்க வேண்டும். அப்படி ஒன்றிரண்டு பெருச்சாளிகள் எல்லா இடங்களிலும் இருக்கும். வீடு என்று கட்டினால் நம்மோடுகூட பெருச்சாளி வந்துவிடுகிறது. அதற்கு வாடகை, வரி ஒன்றும் கிடையாது.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, after the very effective explanation given by Sri K. Balasubramanya Ayyar, I have nothing to add. This provision was very carefully considered in the Select Committee. I can only say that much can be said on both sides, but the Select Committee's wisdom should be accepted by the House.

SRI M. SUBBIAH CHETTIAR : I withdraw my amendment, Sir.

The amendment was, by leave, withdrawn.

* VIDWAN T. MUTHUKANNAPPAN : தலைவர் அவர்களே, I move—

" (i) *For* the existing sub-clause (3) (*a*), *substitute* the following :—

' (*a*) No person shall, at the same time, be a member of the Committees of more than one society, of the same class. There is, however, no objection to a person being at the same time a member of not more than five Committees of registered societies if they are of different classes '."

The amendment was duly seconded.

1st September 1961] [Vidwan T. Muthukannappan]

*VIDWAN T. MUTHUKANNAPPAN: தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் அன்றும் விளக்கமாகச் சொன்னேன். இது அனைவருக்கும் தெரிந்த சாதாரண விஷயம்தான். ஒரேவிதமான 5 சங்கங்களிலே ஒருவர் இருப்பது, மற்றவர்களுடைய உரிமையைப் பறிப்பது போலாகும். மற்றவர்களுக்கு வரக்கூடிய பலனை ஒருவரே எடுத்துக்கொள்வது போலாகும். எடுத்துக்காட்டாக, 5 வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களிலே ஒருவர் இருக்கிறார்; 5 கிரடிட் சொசைடிகளிலே ஒருவர் இருக்கிறார்; 5 விவசாய சொசைட்டிகளிலே ஒருவர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளலாம். அப்போது மற்ற நான்கு பேர் அனுபவிக்கவேண்டியதை அவர் ஒருவரே அனுபவிக்கிறார். அப்போது மற்ற நான்கு பேருக்கு உள்ள வீடுகளை இவரே எடுத்துக்கொள்ள முடிகிறது. 12 ஆயிரம், 20 ஆயிரம் என்று கடன் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் 5 வீடுகளுக்கு 60 ஆயிரம் கொடுக்கிறதென்றால் அதை ஒருவர் பெறுகிறார். அப்படியில்லாமல், ஒரேவிதமான சொசைடியில் பலவற்றில் இருக்காமல், வித்தியாசமானவைகளுள்ள சங்கங்களிலே இருப்பதில் தவறே கிடையாது. ஒரேவிதமான சங்கங்களில் ஐந்தில் ஒருவர் இருப்பதனால் மற்றவர்களுடைய உரிமை பறி போவதுபோலாகிறது. ஆகையால், இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அப்படி ஒருவர் ஐந்தில் இருப்பதற்குத் தேவை வேண்டும். அது முக்கியம். In the words of Culvert, I.C.S., 'Co-operation is a method of doing business. One circumstance without which there can be no successful co-operation is the common end of some economic advantage'. அந்தத் தேவையிருக்கவேண்டும். அப்படி ஒருவர் ஒரு வீடு கட்டும் சொசைடியில் இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரே வீடுதான் கிடைக்கும். மற்ற நான்கு பேர் இருக்கக்கூடியவர்களுக்குப் பலன் கிடைக்கிறது. இன்னும் பார்த்தால் கண்ட்ராக்டர்கள் தெரிந்தவராக இருப்பார்கள், மற்றவர்கள் தெரிந்தவராக இருப்பார்கள். இதன்மூலம் "பிஸினெஸ்" செய்வார்கள். இது ரொம்ப நல்ல மசோதா. இதில் உள்ள சில களைகள் களையப்படுமானால் அதாவது ஐந்துவிதமான சொசைடிகளில் ஒருவர் இருக்கலாம் என்றால் நன்றாக இருக்கும். இல்லையென்றால் மற்றவர்களுக்குப் பலன் இருக்காது.

Sir, I move also—

"(ii) *For* the existing sub-clause (5) (*a*), *substitute* the following :—

'(*a*) Such member or members of a Committee on account of whose dereliction of duty or misconduct, the Registrar had to enforce the provisions of section 72 of the Act, shall be declared, after due enquiry, by the Registrar as disqualified for election or appointment to that Committee, for a period of three years from the date of the expiry of the period of supersession'."

The amendment was duly seconded.

[1st September 1961.

*VIDWAN T. MUTHUKANNAPPAN : தலைவர் அவர்களே, இதிலே விலக்கப்பட்ட நிர்வாகக் குழுவினர்கள் அப்படியே போய் விடவேண்டும், அடுத்த மூன்று ஆண்டுவரை அவர்கள் திரும்ப வரக் கூடாது என்று இருக்கிறது. ஒரு நிர்வாகக்குழு இருக்கிறது. அந்த நிர்வாகம் சரியாக நடைபெறுததற்கு யாரோ சிலர்தான் காரணமாக இருப்பார்கள். 12 பேர்கள் இருந்தால் அந்த 12 பேர் களும் காரணமாக இருக்காது. என் அனுபவம் அது. மைனாரிடி யினர் தப்பு என்று கேட்பார்கள். மெஜாரிடி கும்பல் கூடி ஏதோ செய்வார்கள். மைனாரிடியினர் ரிஜிஸ்ட்ராரிடம் முறையிட்டு தாறுமாறாக நடக்கிறது, இதைக் கலைத்துவிடுங்கள் என்று சொன் னால், அரசாங்கம் கலைத்து விடுகிறது. நிர்வாகத்தைக் கலைத்து விட்டால், நல்லவர்களாக இருந்து சொசைடி நன்றாக நடத்தப்படு கிறதே, அவர்கள் கூட மூன்று ஆண்டு காலங்களிலே இங்கு வர முடியாது என்று சொல்வது அவ்வளவு நல்லதாக நான் நினைக்க வில்லை.

4.20 p.m.

Under the Madras Co-operative Societies Act, 1932, only the entire committee of the society can be superseded. It may sometimes happen that one or two members of the committee of a society may be the evil genius.

அப்படியெல்லாம் இருப்பார்கள்.

In Bombay, rule 48 provides power to the Government to remove any of the members of the committee of a society and appoint one or more members, as the case may be, in the place of a member or members so removed.

Section 38 of the Bengal Act provides power to the Government not only to dissolve the management of the society but to disqualify any or all of the members from being elected for a period not exceeding three years.

நான் சொல்லுகிற அந்தக் குழுவை வேண்டுமானால் கலைத்துவிடுங் கள். ஆனால் குற்றமற்ற மெம்பர்களை disqualify பண்ணுவது என்று சொல்லுவது சரியில்லை. ரிஜிஸ்ட்ரார் கூட்டம் கூட்டி தவறான முறையிலே நிர்வாகக்குழு நடப்பதற்குக் காரணம் யார் என்று கண்டுபிடித்து அதற்குக் காரணமானவர்களை மட்டும் விலக்கவேண்டும். எல்லோரும் விலக்கப்படவேண்டும், 3 ஆண்டுகளுக்குள் மெம்பராக வரக்கூடாது' என்று சொல்வது சரியல்ல.

MR. CHAIRMAN : The hon. Member should not make an elaborate speech on an amendment.

*THE HON. SRI R. VENKATARAMAN : கனம் தலைவர் அவர் களே, கனம் அங்கத்தினர் திரு. முத்துக்கண்ணப்பன் அவர்கள், அங்கத்தினராக இருப்பதற்கும் கமிட்டி அங்கத்தினராக இருப்ப தற்கும் உள்ள வித்தியாசத்தைச் சரியாக அறிந்து கொள்ளாமல்

1st September 1961] [Sri R. Venkataraman]

இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். இப்போது இருக்கிற சட்டப்படி ஒருவர் ஒரு குறிப்பிட்ட சொசைடியில் அங்கத்தினராக இருக்கலாம். ஏனென்றால் பல கிரெடிட் சொசைடிகளில் இருந்துகொண்டு கடன் வாங்கிக்கொண்டிருப்பது கூட்டுறவு இயக்கத்தினரின் கொள்கை அல்ல. வீடுகட்டும் சொசைடிகளில்கூட ஒரு வீடுகட்டும் சொசைடியில்தான் அங்கத்தினராக இருக்கலாம் என்று இருக்கிறது. குடியிருப்பு வசதிக்காக ஒரு வீடு கட்டிக்கொள்ள கொடுக்கலாம். மற்றவர்களுக்குத் தேவை யில்லை. இந்த விதிகளை அவர்கள் நினைக்கக்கூட இல்லை. அவர்கள் சொல்லுகிறபடி, எக்சிகியூட்டிவ் கமிட்டிகளிலே மூன்றுக்குமேல இருக்கக்கூடாது என்று சொன்னால், பல கஷ்டங்கள் வரும். உதாரணமாக, பிரைமரி சொசைடியில்—கிரடிட் சொசைடியில் இருக்கிறவர்கள்தான் சென்ட்ரல் பாங்கு சொசைடியில் இருக்க முடியும். இரண்டும் கிரடிட் சொசைடிதான். இரண்டும் ஒரே கிளாஸ் சொசைடிதான். டிஸ்ட்ரிக்ட் மார்கெட்டிங் சொசைடியில் இருக்கவேண்டுமென்றால், பிரைமரி மார்கெட்டிங் சொசைடியில் இருக்கவேண்டும். பிரைமரியில் இருக்காமல் டிஸ்ட்ரிக்ட் மார்கெட்டிங் சொசைடியில் இருக்கமுடியாது. ஆகையால்தான் ஒரே கிளாசில் உள்ள சொசைடிகளில் ஒன்றுக்குமேல் இருக்கக்கூடாது என்று சொன்னால், கஷ்டம் ஏற்படும்.

இரண்டாவது திருத்தத்தைப் பொறுத்தமட்டில், கமிட்டியில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருப்பார்கள். அவர்களைப் பார்த்து நல்லவர்களுக்கு மாத்திரம் விலக்குக் கொடுக்கவேண்டும். தவறாக இருந்தால் 3 வருஷம் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று சொல்லலாமா என்கிறார். கமிட்டி என்பது ஜாயிண்டாக எல்லாருடைய கூட்டுப்பொறுப்பில் நடப்பது. கூட்டுப்பொறுப்பில் நடக்கிறபோது தவறுகள் நடக்குமானால், அது கமிட்டியினுடைய தவறுதான். கமிட்டியினுடைய தவறால் எல்லோரையும் அனுப்புவதில் அவர்களுக்குக் கட்டுப்பாடு செய்வதுதான் நியாயம். அதனால்தான் இது செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன்.

The amendments were, by leave, withdrawn.

Clause 28 was put and carried.

Clauses 29 to 39 were put and carried.

Clause 40

MR. CHAIRMAN : The motion is—

" That clause 40 do stand part of the Bill."

SRI T. P. SRINIVASAVARADAN : Sir, I move—

" In sub-clause (6), *for* the words ' five hundred rupees *substitute* the words ' one hundred rupees '."

Sir, in the case of some credit co-operative societies the disbursing officer happens to be the Headmaster or the Correspondent and this 'five hundred rupees' is too large a sum. Therefore, I move my amendment to reduce it to Rs. 100.

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, the clause only provides that the fine may extend to Rs. 500. The quantum of punishment will be left to be decided by the court and no court will inflict such a heavy fine on an elementary school headmaster, who is running a small co-operative society. But there are occasions when large sums have to be deducted. For example, factory managers have to deduct lakhs of rupees. When they do not do it, even this punishment is not adequate. In a similar legislation with regard to Provident Fund, the penalty is a fine of Rs. 1,000. Therefore, we have not imposed any hardship on the employer in this Bill. The clause may be accepted.

The amendment was, by leave, witdrawn.

Clause 40 was put and carried.

Clauses 41 to 63 were put and carried.

Clause 64

MR. CHAIRMAN : The motion is—

"That clause 64 do stand part of the Bill."

SRI T. P. SRINIVASAVARADAN : Sir, I move—

"In sub-clause (1), *add* the following words at the end :—

'If, however, a registered society desires to have concurrent audit by a chartered accountant, it may do so. This does not preclude the audit by the Registrar'."

This is very important amendment. Audit by the department is not done regularly. Accounts relating to 1958–59 are just now audited and because of the late audit we are unable to recover any amount that is due from members. Therefore, my amendment says that the society may be permitted, if it wants, to have concurrent audit in addition to departmental audit.

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Government are alive to the fact that there has been delay in the audit of accounts of co-operative societies. We have now effected one major reform, namely, separation of audit from administration, and we have appointed an Accounts Officer to be the Chief Accounts Officer for co-operative audit. Now, the next step is to strengthen co-operative audit and Government have proposals under way to strengthen it. In the course of a year or two all these complaints about delay in audit, I expect, will be minimised.

1st September 1961] [Sri R. Venkataraman]

So far as having concurrent audit in addition to the co-operative audit is concerned, I think it is unnecessary. It will even lead to wasteful expenditure. However, in specified cases if the society makes a request, the Registrar will consider it on its merits.

SRI T. P. SRINIVASAVARADAN : I feel that this is an important matter. Therefore, I am not withdrawing my amendment.

MR. CHAIRMAN : The question is—

" In sub-clause (1), *add* the following words at the end :—

' If, however, a registered society desires to have concurrent audit by a chartered accountant, it may do so. This does not perclude the audit by the Registrar.' "

The amendment was put and lost.

Clause 64 was put and carried.

Clause 65.

MR. CHAIRMAN : The motion is—

" That clause 65 do stand part of the Bill."

SRI T. P. SRINIVASAVARADAN : Sir, I move—

" (i) In sub-clause (2), after the words ' the person authorized by him ' and before the words ' under sub-section (1) ' *insert* the words ' not below the rank of a Deputy Registrar '.

(ii) In sub-clause (2) (*a*), *for* the words ' at all reasonable times ', *substitute* the words ' during the working hours of the Society '.

(iii) In sub-clause (2) (*c*), after the words ' may summon ' and before the words ' any person ' *insert* the words ' only to the office of the Society.' "

With regard to the first amendment, sometimes the Co-operative Inspector is authorized to conduct this inquiry. In some cases it is the Co-operative Sub-Registrar and in some other cases it is the Junior Co-operative Sub-Registrar. Therefore, my amendment says that he should be one not below the rank of a Deputy Registrar.

With regard to the second amendment, the Hon. Minister, will see its reasonableness. In clause 22 it is stated that any member of a registered society may, at any time ' during office hours ' inspect the accounts of the society. But in this clause it is stated ' at all reasonable times '. I know in one case the inquiry officer wanted the inquiry to be held at 8 o'clock in the evening. Therefore, I have stated that it should be ' during the working hours of the society '.

With regard to the third amendment, the sub-clause says that ' he may summon any person '. Is it to his residence or to some other place? It should be to the office of the society. The inquiry must be held in the office of the Society, and the person must be summoned to the office of the Society.

SRI S. NATARAJAN : I second the amendment, Sir.

4-30 p.m. * THE HON SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, the question of enquiry will depend on the nature of the society. What is the use of asking a Deputy Registrar to go and enquire into the affairs of a society with about 50 members and five thousand rupees capital? For that a Co-operative Junior Inspector would be sufficient. For a higher society there is the Senior Inspector. If it is a still bigger society, then the Deputy Registrar could enquire. Therefore, the discretion should be with the Government or with the Registrar. The departmental officer as may be necessary in the circumstances of the case will, of course, be deputed.

So far as the second amendment of the hon. Member is concerned, if we merely say 'working hours', it will be very difficult for the officer concerned to attend to departmental work as well as to this work. There is also another difficulty. Many members of the co-operative societies may be employees and if we say 'office hours', no member working in other offices would be able to come and attend the enquiry. That is why we have said it should be "at all reasonable times". It is not possible to lay down conditions in statute for all contingencies. That is why we used the expression "reasonable times". If there is any particular difficulty or complaint, it should be made to the Registrar.

As regards clause (3), the amendment will be difficult to observe, because it may be that he has to be summoned to the Financing Bank for purposes of proving an entry. Money is given by the Financing Bank. The documents of the Financing Bank cannot be carried outside it for enquiry into the affairs of a society which is not working well. This examination and summoning must be left to the officer conducting the enquiry. If there is any mistake on the part of the officer conducting the enquiry, the matter could be taken up to the higher officers for due attention.

MR. CHAIRMAN : Is the Hon. Member withdrawing his amendment?

SRI T. P. SRINIVASAVARADAN : Sir, I withdraw my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 65 was put and carried.

Clauses 66 to 78 were put and carried.

Clause 79.

MR. CHAIRMAN : The motion is—

'That clause 79 do stand part of the Bill.'

1st September 1961]

SRI A. K. THANGAVEL MUDALIAR : Mr. Chairman, Sir, I move—

'In sub-clause (1), *add* the following proviso :—

"Provided that it shall be a condition of the agreement that a member of the Joint Farming Society whose lands have been pooled, shall be entitled to the income derived by him from the land immediately before he joined the society." '

The amendment was duly seconded.

* SRI A. K. THANGAVEL MUDALIAR : தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகட்கு இது கஷ்டம். பெரிய விவசாயிக்குத்தான் லாபம். சங்கத்தில் சேரும்பொழுது 2, 4, 10, 100 ஏக்கர வைத்திருப்பவர்கள் பலவிதமாகச் சேருகிறார்கள். 2, 3 ஏக்கர் இருப்பவர்களுக்கு வேறு சொத்து கிடையாது. 60 ஏக்கர் சேர்த்து சங்கத்தை ஆரம்பித்தால் சிறிய விவசாயிகளுக்கு அதிலேயே பாடு பட வேண்டியிருக்கிறது. அப்பொழுது ஏற்கனவே அதில் சம்பாதித்த வருமானம் இல்லாது போய்விட்டால் என்ன செய்வான்? வேலை செய்தால் கூலி. ஒரு வருஷம் செய்தால்தான். சங்கத்தில் சேர்ந்த வருஷ முடிவில் லாபம் வரவில்லை. நஷ்டந்தான் வந்தது. அப்பொழுது, ஒன்றுமில்லை அவனுக்கு. வரவேண்டிய வருமானத்தை இழக்க நேரிடுகிறது. ஏற்கனவே சொந்தமாக இருந்த 4 ஏக்கரை வைத்து அதை உழுவான். அந்த ஏக்கரில் இருக்கும் லாபமிருக்கிறதே அது கெடாமல் அவர்களுக்குக் கொடுக்க சட்டத்தில் வழிசெய்ய வேண்டும். ஐந்து வருஷங்கழித்து லாபம் வருவதாக இருந்தால், லாபத்தில் 50% நில சொந்த விவசாயிக்கு ஒதுக்கப்படுகிறது. சட்டத்தில் சங்கத்தில் சேரும்பொழுதே ஏற்கனவே இருக்கும் வருமானத்திற்கு பாதகமில்லாமல் இந்த கூட்டத்தில் சேர்க்கவேண்டும். பணக்காரனுக இருப்பவன் 10 ஏக்கர் புஞ்சை நிலம் சங்கத்தில் சேர்த்ததில் கரும்பு, வாழை, நஞ்சைப்பயிர் வைக்க லாயக்குள்ளதாகிறதே என்று விட்டு விட்டு லாபத்தைக் கருதாது போய் விடுகிறான். ஏழை என்ன செய்வான். வேறெங்கும் போக முடியாது. ஆகையால் அவனுக்கு நஷ்டம். பணக்கார வியாபாரிக்கு லாபம். அதனால்தான் இதைச் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆகையினாலே, பழைய வருமானத்தைப் போக்காமல் வருமானத்திற்கு வழி செய்து சங்கத்தை Register செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : தலைவர் அவர்களே, கூட்டுறவு விவசாயப் பண்ணையில் சேர எந்த விதமான நிர்ப்பந்தமுமில்லை. ஐந்து ஏகராவுக்குக் குறைவாக வைத்திருப்பவர்கள் லாபமில்லையென்று நினைத்தால், சேரத் தேவையில்லை. சேர்ந்தால் லாபம் வருமென்று நினைக்கிறபொழுது, வரும் லாப நஷ்டத்தை அவர்கள்தான் பொறுத்துக்கொள்ள வேண்டும். அதனால், அவர்களுக்கு guarantee கொடுக்கவேண்டுமென்று மற்ற ஏழை மெம்பர்கள் வருவாயிலிருந்து பிடிப்பது நல்லதல்ல. யாராவது, ஐந்து

ஏகராவுக்குக் குறைவாக வைத்திருப்பவர்கள் சங்கத்தில் சேர்ந்தால், மூன்று வருடத்திற்கு மட்டும் என்ன வந்ததோ அதற்கு guarantee கொடுக்க வேண்டுமென்று சொன்னார். மற்றவர்கள் வருவாயிலிருந்து எடுத்துக்கொடுக்க முடியாது. அவர்களாக யோசனை செய்து செய்யவேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன். பணம் கொடுப்பது பற்றியவரை சொல்லியிருக்கிறேன். இதைச் செலவோடு சேர்த்து வைக்க வேண்டும்.

MR. CHAIRMAN : Is the hon. Member withdrawing his amendment?

SRI A. K. THANGAVEL MUDALIAR : Sir, I withdraw my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 79 was put and carried.

Clauses 80 to 87 were put and carried.

New clause 87-*A*

* SRI M. SUBBIAH CHETTIAR : Mr. Chairman, Sir, I move—

After clause 87, *add* the following as new clause 87-A :

" 87-A (1) Where an order has been made for the winding up of a registered society the liquidator shall submit a report to the Registrar whether he is of opinion any loss has been caused to the registered society since its formation by any act or omission (whether or not a fraud has been committed by such act or omission) of any member of the committee or office-bearer of the registered society.

(2) If, on consideration of the report submitted under subsection (1), the Registrar is of opinion that any member of the committee or any office-bearer of the registered society should be examined, he shall institute an enquiry in the manner prescribed.

(3) Where on such enquiry, the Registrar is of opinion (whether a fraud has been committed or not) that a member of the Committee or an office-bearer of the registered society is not fit to be a member of the committee or an office-bearer, he may make an order that such a person shall not without the leave of the Registrar, be a member of the committee or an office-bearer of any registered society."

The amendment was duly seconded.

* **SRI M. SUBBIAH CHETTIAR :** சார், இப்பொழுது இந்தத் திருத்தம் கொண்டுவந்ததன் காரணம், இந்த சமயத்தில் 28 தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதை எல்லோரும் சேர்ந்து பல நாள் விவாதிப்பதற்கு வசதி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஒருவன் நல்லவனாக இருப்பதாக நாம் நினைக்கலாம். ஏதோ சில காரணங்களால், **Society-ஐ liquidate** செய்யும் நிலைமையை ஏற்படுத்தி, அதற்கு **Liquidator**-ஐ நியமித்து தவறான காரியமேற்பட்டால், அதற்கென ஒரு விதி இருக்கும் பொழுது, ஒருவர் செய்யும் தவறு எவ்வளவு நாளாக இருந்தாலும்,

4-40 p.m.

1st September 1961] [Sri M. Subbiah Chettiar]

பொது ஜனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுமென்று இருப்பதால், இதைத் தடுப்பதற்கு அந்த மாதிரித் தவறு செய்பவர்களுக்கு முதலில் இந்த சட்டத்தில் Section 71-ன் கீழ் பல Contingencies வைத்திருக்கிறார்கள். ஆறு வருஷத்திற்கு மேலிருந்தால், ஒரு நடவடிக்கையும் எடுக்கமுடியாதென்று சொல்லுகிறார்கள். ஆறு வருஷமென்று சட்டத்திலிருப்பதால், உண்மையான தவறேற்பட்டால், எத்தனை வருஷ காலம் ஆனாலும் Co-operative Societys-ல் இல்லாமலிருக்க வழி செய்யாத காரணத்தை வைத்துத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இதனால் கூட்டுறவு ஸொஸைடியில் பல காலமாகத் தீமை செய்தாலும் ஒன்றும் செய்யமாட்டார்களென்று நினைக்க வழியில்லாமலிருக்கும். முக்கியமாக, கூட்டுறவுச்சங்கத்தில் பணம் நல்ல புழக்கமேற்பட்டு, பாங்குகள் தொழில் செய்து வருவதால், Bank Act படி இந்தப் புதிய ஷரத்தைச் சேர்த்தால் நமக்குப் பந்தோபஸ்து ஏற்படுமென்று சொல்லி, இதை மந்திரி ஒப்புக்கொள்ளுவார்களென்று நினைக்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, this has already been provided for in clause 71 where in the case of winding up of a society, if it is found that some of the Directors or other officers of the society had committed or brought about any loss, then they are liable to surcharge, and once they are surcharged under sub-clause (4) of clause 28, they would be disqualified from standing for election. Therefore, the object the hon. Member has in mind will be fulfilled according to the provisions as they stand now.

* SRI M. SUBBIAH CHETTIAR : 28-வது செக்ஷன் பிரகாரம் தவறு செய்பவர் பலநாள் இருக்க முடியாது என்று தீர்மானம் செய்யப்பட்டிருப்பதால் ஆறு வருஷத்திற்குப் பிறகு அவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்று 71-வது செக்ஷனில் சொல்லப்படுகிறது. மந்திரி கூறுவதை அனுசரித்து, புனராலோசனை ஏற்பட்டதென்று எண்ணி இதை நான் வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clauses 88 to 122 were put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I move—

'That the Madras Co-operative Societies Bill, 1961 (L.A. Bill No. 22 of 1961), as passed by the Assembly, be passed.'

MR. CHAIRMAN : The question is—

'That the Madras Co-operative Societies Bill, 1961 (L.A. Bill No. 22 of 1961), as passed by the Assembly, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS OCCUPANTS OF KUDIYIRUPPU (PROTECTION FROM EVICTION) BILL, 1961 (L.A. BILL NO. 27 OF 1961)

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Chairman. Sir, I move—

'That the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Bill[a], 1961 (L.A. Bill No. 27 of 1961), as passed by the Assembly, be taken into consideration.'

Sir, as explained in the Statement of Objects and Reasons, the object of this Bill is to give temporary protection from eviction to occupants of kudiyiruppus, as it was brought to the notice of the Government that landowners, in order to facilitate the disposal of their surplus lands before the ceiling law came into force, were evicting the agriculturists and agricultural labourers occupying their kudiyiruppus. Necessary provisions in this regard were first included in the Ceiling Bill but, on the recommendation of the Joint Select Committee on the Ceiling Bill, the provisions were omitted from the Bill and this Bill has been brought forward. The proposed Act will be on force for a period of three years only. It is the intention to bring forward, in the meantime, a comprehensive legslation in regard to the occupants of kudiyiruppu, after detailed examination as to what permanent rights should be conferred on them.

Certain amendments have been made to the Bill in the Assembly, as explained below :—

In sub-clause (6) of clause 2, for the words ' dwelling house ' in the three places where they occur, the words ' dwelling house or hut ' have been substituted.

To the same sub-clause, an explanation has been added that ' it shall be presumed that any person occupying the kudiyiruppu is an agricultural labourer or agriculturist until the contrary is proved '. The intention behind the amendment was that no occupant of a kudiyiruppu should be evicted until it is proved that he is not an agriculturist or an agricultural labourer.

In sub-clause (7) of clause 2, for the words ' and includes his heirs, assignees, legal representatives or persons deriving rights through him ', the words ' and includes his heirs and legal representatives' have been substituted.

In sub-clause (3) (a) of clause 3, for the words ' the kudiyiruppu ', the words ' the property belonging to the owner of the kudiyiruppu ' have been substituted.

In clause 4 and 5, the words ' or the major part thereof ' have been omitted.

In sub-clause (1) of clause 7, for the words ' thirty days ', the words ' sixty days ' have been substituted.

---

[a] Printed as Appendix I on pages 450–454 infra.

1st September 1961] [Sri M. A. Manickavelu]

In the explanation to that sub-clause, the words 'a copy of' have been omitted.

In sub-clause (2) of clause 14, items (*b*) and (*c*) have been re-lettered as (*c*) and (*d*) respectively and the following item has been inserted as item (*b*) :—

(*b*) the manner of holding summary enquiry under section 6;

In item (*c*) as so re-numbered, the words 'a copy of' have been omitted.

With these amendments made in the Assembly, the Bill has come before this House for its consideration. I hope that the Council will take it into consideration and approve it.

MR. CHAIRMAN : Motion moved :

'That the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Bill, 1961 (L.A. Bill No. 27 of 1961), as passed by the Assembly, be taken into consideration'.

SRI K. T. KOSALRAM : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை இவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவந்த ரெவின்யூ அமைச்சர் திரு. மாணிக்கவேலு அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த மசோதா வருமா என்றுதான் நான் மிகமிக சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்த மசோதா ஏழைகளுக்கு, ஏழைக் குடியானவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் போன்று இருக்கிறது. மனிதன் குடியிருப்பதற்கு வீடு இல்லாமல் தவிக்கிறதைப் பார்க்கிறோம். குடிசை கட்டிக்கொண்டு வாழ்கிறான். மாடி வீடுகளிலே, மாளிகைகளிலே வாழ்கிறவர்கள் அந்தக் குடிசையைப் பிய்த்தெறிவதில் சந்தோஷம் அனுபவிப்பதையும் நாம் பார்க்கிறோம். அந்த நிலைமையில் அரசாங்கம் இன்று நாட்டில் இருக்கிற நிலைமையை உணர்ந்து விவசாயிகள் குடியிருக்கிற இடம், அவர்கள் குடியிருக்கிற வீடு, அவர்கள் கட்டியிருக்கிற குடிசை இவைகளைப் பிரிப்பதற்கு விடமாட்டோம் என்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும்போது ஒன்றுமட்டும் எனக்குப் புரியவில்லை. 1959-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து மாத்திரம் குடிசையிருந்தால்தான், அப்போது அவர்கள் வீடு கட்டிக்கொண்டிருந்தால்தான், அதைப் பாதுகாத்துக் கொடுக்க முடியும் என்று இந்த மசோதாவில் கண்டிருக்கிறது. மனிதன் குடியிருப்பதற்கு இடம் இல்லாமல் தவித்து எங்கோ ஒரு இடத்தில் குடிசை கட்டுகிறான். அவனுக்கு மாட மாளிகை கூடகோபுரங்கள் இருந்திருந்தால் அவன் சுற்றிலும் உள்ள நாற்றத் தண்ணீருக்கு மத்தியில் நிச்சயமாகக் குடியிருக்க வரமாட்டான். அவன் குடியிருக்க இடமில்லாத நிலையில் அது போன்ற இடங்களில் குடிசை கட்டி வாழுகிறான். அப்படியிருக்க 1959-ல் அவன் இருந்தால்தான், அதை நான் பாதுகாத்துக்கொடுப்பேன் என்று அரசாங்கம் சொல்லுமானால், அடுத்து ஒரு "லிட்டிகேஷன்"-க்குத்தான் வழி செய்து நாம் கொடுக்கிறோம். பணம் படைத்தவர்கள்

குறிப்பாக மடாதிபதிகள், கடவுள் பெயரால் ஏழைகளை அக்கிரமமாக, அநியாயமாகச் சுரண்டுகிறவர்கள் தினம் தினம் செய்துகொண்டுவரும் காரியங்களை நாம் பார்க்கிறோம். அவர்களைப் போன்றவர்கள் 1959-க்குப் பிறகுதான் குடிசை கட்டினார்கள் என்று வாதாடுவதற்கு வசதியாயிருக்கும். ஏழைகளுக்கு வசதி செய்கிறோம் என்று சொல்லிவிட்டு அதற்காக ஒரு மசோதா கொண்டுவந்துவிட்டு யாரோ சிலர் நன்மைக்காக இப்படிச் செய்திருப்பது நல்லதல்ல. 1959-க்கு முன்னால்தான் இருக்கிறேன் என்று வழக்காடுவதற்கு ஏழை எங்கே போவான். அவன் வழக்குக்காக வக்கீலிடம் கொடுக்கும் பணம் இருந்தால், சொந்தமாக இடமே வாங்கிவிடுவானே. அவன் 1959-க்குப் பின்தான் வந்தான் என்று வழக்காட பெரிய மனிதர்களுக்கு என்ன கஷ்டம் இருக்க முடியும்? அவன் 1959-க்கு முன்தான் வந்தேன் என்று சொல்ல என்ன வக்கிருக்கிறது அவனிடம் என்று அமைச்சர் திரு. மாணிக்கவேலரைக் கேட்கிறேன். சுற்றி வயல் இருக்கிறது. அங்கு இடமில்லை. அந்த இடத்தில் குடிசை கட்டிக்கொண்டு வாழ்கிறான் வசதி இருந்தால், அந்த இடத்தில் வாழவேண்டுமென்று அவன் நினைக்கவே மாட்டான். 1959-ம் வருஷத்திலிருந்து இந்த மசோதா அமுலுக்கு வருமென்று சொல்லியிருப்பது மிக அபத்தமானது என்று சொல்கிறேன். அந்த நிலைமையிலிருந்து அதைத் திருத்தி, இந்தச் சட்டம் 'பாஸ்' ஆன தேதியிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறோம் என்று சொன்னால் தான் அவர்களுக்கு உண்மையான உதவி செய்வதாக ஆகும். இல்லாவிட்டால் ஏழைகளுக்கு மீண்டும் துன்பம் கொடுக்கும் நிலைமையில் இருப்போமே தவிர உபகாரம் செய்தவர்களாக இருக்கமுடியாது.

4 50 p.m.

அடுத்தபடியாக, வீடு கட்டிக்கொள்ளுகிறார்கள். அதைச் சுற்றி ஏராளமான நிலங்கள் தனிப்பட்ட மனிதர்களுக்கோ அல்லது கோவில்களுக்கோ அல்லது மடாதிபதிகளுக்கோ இருக்கின்றன. ரோடு போடுவதற்குக் கேட்டால்; இடம் கொடுக்க மாட்டேன் என்பார்கள். விக்கிரமசிங்கபுரம் பக்கத்தில் ஒரு பெரிய கிராமம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் போகும் போது, நூற்றுக்கணக்கான ஜனங்கள் அமைச்சர் காலில் விழுந்து மன்றாடி முறையிட்டுக்கொள்வார்கள். அப்படியும் ரோடுபோட இடம் கிடைக்காது. கிணறு வெட்ட இடம் கொடுக்க மாட்டார்கள். இடம் அவர்கள் இடம். வீடு மாத்திரம் கட்டிக்கொண்டார்கள். அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது என்ற காரணத்தால், அதிகாரிகள் அந்தப் பெரிய மனிதர்களிடம் சலுகை காட்டுகிறார்கள். ரோடு போட இடம், கிணறு வெட்ட இடம் கொடுக்காமல் இருப்பவர்களுக்கெல்லாம் ஓரளவுக்கு வகை செய்வதாக, எந்தெந்தக் காரணங்களுக்காக எல்லாம் அவர்களைத் தொந்திரவு செய்யக்கூடாது என்று ஸ்பஷ்டமாக இந்த மசோதாவில் இல்லை. ஆகையால் இந்த மசோதாவின்கீழ் 'ரூல்ஸ்'

1st September 1961] [Sri K. T. Kosalram]

போடும்போது, அதை ஸ்பஷ்டமாக என்னென்ன காரணங்களுக்காக என்று போட வேண்டும். குடியிருப்பதற்கு வேண்டிய வசதியும் அதற்குத் தகுந்த சுற்றுவட்டார வசதியும் வேண்டுமென்று போட்டிருக்கிறது. அதேமாதிரியான வசதிகளுக்கு எல்லாம் அந்த நிலங்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதோடு அந்த நிலங்களைப் பாதுகாத்து அங்கிருக்கிற குடியானவனுக்குக் கொடுக்க வேண்டுமென்பதையும் உறுதிபடுத்தும் வகையில் அதில் சேர்த்து விட்டால் ஏழைகளுக்கு வசதியாக இருக்க முடியும். அதோடு exclusive for non-agricultural purposes என்ற கிளாஸை எடுத்திருந்தால், இந்த சர்க்கார் பெரிய நல்ல காரியம் செய்ததாக இருக்க முடியும். குடியிருப்பதற்கு இடம் இருந்தால், குடிசை கட்டிக்கொண்டு வாழவேமாட்டான். 50 ஏக்கர் நிலம் இருந்தால், இரண்டு ஏக்கர் பறிமுதல் செய்கிறேன் என்று சொல்லலாம். சட்டத்திற்குப் புறம்பாகக் கூட சிலர் செய்கிறார்கள். அப்படிச் சொன்னாலும்கூட, அவனுக்குக் குடியிருப்பதற்கு வேறு இடம் இருந்தால், நிச்சயமாக அவன் ஆக்கிரமிக்க மாட்டான். இப்படிக் குடிசை கட்டிக்கொண்டு இருக்க அங்கு வரமாட்டான். இப்போது உச்ச வரம்பு கொண்டுவந்தோம். அது வேறு விஷயம். இதில் விவசாயிகளுக்கு மாத்திரம்தான், மற்றவர்களுக்கு இல்லை என்று சட்டம் கொண்டுவராமல் இருந்தால், லட்சக்கணக்கான ஜனங்கள் குடியிருப்பதற்கு வழி செய்ததாக இருக்க முடியும். நிச்சயமாக இப்போது சீலிங் போட்டு விட்டோம். ஒருவர் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லும்போது மற்றவர்களுக்கும் அது வந்துதான் தீரவேண்டும். குடியிருப்பதற்கு அவனுக்குத் தக்க வசதி செய்தான பிறகு ஆக்கிரமித்துக் கொண்டால், அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பிரயோகித்து அவனை வெளியேற்றுவதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஏற்கனவே இடமில்லை குடிசைக்கு. அவனுக்கு வகைசெய்யும் அளவில் இந்த மசோதா இருக்கவேண்டும். அப்போதுதான் அது மனிதத்தன்மையில் இருக்கமுடியும். இதைத் தகுந்தவாறு திருத்தவேண்டும். கவுன்சிலுக்குக் கொண்டுவந்து திருத்தினால், மறுபடியும் அசெம்பிளிக்குக் கொண்டுபோகவேண்டுமே என்று சொல்லலாம். சோஷலிச சமுதாயத்தில் எல்லோருக்கும் வீடு கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். அப்படிப் பார்த்தால் குடியிருப்பதற்கு வீடற்றவனுக்கு வீடு கொடுக்க வேண்டும். இது நல்ல முறையில் கொண்டுவரப்பட்ட மசோதா. அதில் இந்த ஒரு கிளாஸை மாத்திரம் எடுத்துவிட்டால், இந்த நாட்டில் வீடு அற்றவன் இல்லை என்றாகும். இருக்கிற வீட்டை யாரோ உடைத்துத் தகர்த்து எறிகிறான். அவன் வீட்டையும் அவனையும் ரப்பர் பந்து மாதிரி தூக்கி எறிந்துகொண்டே யிருந்தால், அவன் எங்கே போவான்? அந்த நிலைமை இந்த நாட்டிலிருந்து போக வேண்டும். அந்த நிலைமை போகவேண்டுமென்றுதான் நண்பர் திரு. மாணிக்கவேல் அவர்கள் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். 1947-ம் வருஷத்திலிருந்து திரு. சீதாராம ரெட்டி காலத்திலிருந்து

[Sri K. T. Kosalram] [1st September 1961

திரு. மாணிக்கவேலு காலம் வரை 13 வருஷம் இதைக் கொண்டு வந்தார்கள். லாண்ட் சீலிங் மசோதா இருக்கிறதே, அது புலியாக வரவில்லை, பூனையாக வந்திருக்கிறது. இருந்தாலும் இந்த மசோதா இப்போதுதான் வந்திருக்கிறது. செலக்ட் கமிட்டியின் சிபாரிசின் பேரில் கொண்டுவந்தோம் என்று போட்டிருக்கிறார்கள். விவசாயக் கூலிகள் என்றிருந்ததை "விவசாயிகள்" என்று போட்டிருப்பதால் விவசாயிகள் பயன் பெறுவார்கள். நிலச் சட்டத்தினால் பல விவசாயிகள் வெளியேற்றப்படலாம். ஏதாவது ஒரு இடத்தில் நான்கைந்து செண்ட் சொந்தமாக இருந்தால், அதில் அவன் விவசாயம் செய்தால், இந்த மசோதா பாதுகாப்பு அளிக்கிறது. இந்தத் திருத்தத்திற்குப் பிறகுதான் விவசாயிகள் என்று பொதுவாகச் சொல்லிய பிறகுதான் விவசாயிகள் வெளியேறவேண்டாம் என்று வந்திருக்கிறது. அதற்காக திரு. மாணிக்கவேலு அவர்களைப் பாராட்டி இந்தக் கிளாஸை எடுத்து, விதிகள் போடும்போது, அவர்களுக்கு ரோடுகளுக்கும் கிணறுகளுக்கும் இடம் வேண்டும், அதையெல்லாம் பார்க்கவேண்டும், சிலர் சுடுகாட்டுக்குப் பக்கத்தில்கூட இருக்கிறார்கள், அவர்களை அப்புறப்படுத்தாமல் பாதுகாப்பதற்கும் வசதி செய்யவேண்டும், அதற்கேற்ற விதிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதை ஆதரிக்கிறேன்.

5 p.m.

